மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 426/2018 பி.வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | .. மல்லிகா | வயது | .. | 64 |
| த/பெ. | .. சகாதேவன் | சாதி | .. | |
| கிராமம் | .. புத்தூர் | சமயம் | .. | |
| தாலுக்கா | .. | தொழில் | .. | |

**பி. வா.சா. 1. குறுக்கு விசாரணை**

1. முதல் வாதியை எனக்கு தெரியும். 2ம் வாதியையும் தெரியும். இரண்டு வாதிகளும் எந்த ஊர் என்றால் பெரியகரம். சகாதேவன் அவர்களும் பெயரிகரம். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதிகள் என் கணவருக்கு சகாதேவன் 1ம் வாதி கணவர் என்றும் அவர் பென்சன் தொகையும் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிகளை நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 1ம் வாதி என் கணவரின் அக்காவின் மகள் ஆவார்.

2. சகாதேவன் என்பவர் சிறுவயதிலேயே ஆந்திரா கடப்பாவில் உள்ள கல்லூரியில் பேராசிரியராக பணியில் சேர்ந்தார் என்றால் எனக்கு கல்யாணம் ஆன பிறகு அவர் பணியில் சேர்ந்தார். எனக்கு எப்போது கல்யாணம் **07.06.1973** அன்று திருமணம் நடைபெற்றது. என் திருமணத்திற்கு முன்பு சகாதேவன் என்பவர் என்ன வேலை செய்து கொண்டு இருந்தார் என்றால் பிரைவேட்டாக கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்த்து இருந்தார்.

3. ஆந்திரா, நகிரியில் அவர் வேலை பார்த்து வந்தார். அரசு பணியில் சகாதேவன் என்பவர் ஏ்பபோது பணியில் சேர்ந்தார் என்றால் அவர் சேர்ந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. அவர் ஓய்வு பெற்ற நாள் **30.11.2004** ஆகும். சகாதேவன் அரசு பணியில் சேர்ந்தபிறகு தான் எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் இல்லை. திருமணம் தான் நடைபெற்றது.

சகாதேவன் என்பவர் சர்வீஸ ரிஜிஸதரில் என்னை மனைவியாக சேர்த்துள்ளார் அது தான் என் வாதமா என்றால் சரிதான்.

4. சகாதேவன் அவர்களின் சர்வீஸ ரிஜிஸ்தரில் என் பெயரும் குழந்தைகளின் பெயரும் சேர்ப்பதற்கு முன்பு யார் பெயர் இருந்தது என்றால் யார் பெயரும் இல்லை. சகாதேவன் அவர்களின் சர்வீஸ் ரிஜிஸ்தரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் சகாதேவன் அவர்களுக்கும் திருமணம் எங்கு நடைபெற்றத என்றால் வேலூர் பிரம்மபுரத்தில் நடந்தது. எனக்கு திருமணம் நடந்ததாக நான் கூறுவதற்கு நான் எதாவத திருமணச் சான்றிதழ், திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. எனக்கும் சகாதேவன் என்பவருக்கும் காதல் திருமணம் நடைபெற்றதா என்றால் இல்லை. இருவீட்டார் சேர்ந்து தான் திருமணம் நடைபெற்றது. இருவீட்டார் சேர்ந்து திருமணம் செய்து வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4, சகாதேவன் அவர்களும் ஓய்வு பெறுவதற்காக கொடுத்த அழைப்பிதழையும் சகாதேவன் அவர்களின் உடன்பிறந்த சகோதரர்களோ அல்லது அவரின் உறவுகாரர்களின் பெயரோ இல்லை என்றால் சரிதான்.

6. சகாதேவன் அவர்கள் ஓய்வு பெறுவது பற்றி அவரின் உறவுகாரர்களுக்கு தெரியாது என்று சொன்னால் சகாதேவன் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரின் உறவுகாரர்களை அழைக்கவில்லை. நான் தாக்கல் பி.வா.சா.ஆ.7 வாரிசு சான்றிதழில் சகாதேவன் அவர்கள் பிறந்த ஊரான பெரியகரத்தில் பிறக்கவில்லை என்று சொன்னால் இல்லை. புத்தூரில் பெற்றோம். அப்போத நாங்கள் அங்கு தான் வசித்து வந்தோம். சகாதேவன் அவர்கள் சர்வீஸ் ரிஜிஸ்தரில் நிரந்தர முகவரியாக பெரியகரம் முகவரியை கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

7. எனக்கும் சகாதேவன் என்பவருக்கும் திருமணம் நடைபெற்ற போது அவருக்கும் எனக்கும் என்ன வயது என்றால் அவருக்கு 33 எனக்கு 29 வயது இருந்தது. சகாதேவன் அவர்களுக்கும் எனக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் 10 வயது வித்தியாசம் இருந்தது. என்னுடைய பிறந்த தேதி என்னவென்றால் தேதி 3 மற்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 62 வயது என்று சொன்னால் சரிதான்.

8. 2004லில் எனக்கு என்ன வயது என்றால் 50 வயது. நான் வழக்கிற்காக என் வயதை அதிகப்படித்தி கூறுகிறேன் என்றும் நான் கூறுவது தவறு என்றும் சொன்னால் சரியல்ல.

சகாதேவன் அவர்கள் அவர் ஊரான பெரியகரத்திற்கு சென்று வருவாரா என்றால் சென்று வருவார். நானும் உடன் சென்றதுண்டு. கவியரசு என்பவர் யார் என்றால் என்னுடைய பையன். தாமரைச்செல்வன் என்பவர் யார் என்றால் என்னுடைய மூத்த பையன். 2006ல் சகாதேவன் அவருடைய சொத்துக்களை கவியரசு, தாமரைச்செல்வன் அவர்களுக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

9. மேற்கூறிய உயிலின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்கூறிய உயிலா என்றால் இந்த ஆவணம் லீலாவதி பெயரில் உள்ளது, இநத ஆவணம் உயில் ஆவணமா என்று நான் யோசித்து தான் கூறவேண்டும். சகாதேவன் அவர்கள் எழுதிவைத்ததாக நான் கூறும் உயிலை அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்வேனா என்றால் முடியாது. உயிலில் முதல் மனைவி லீலாவதி மற்றும் இருமகன்கள் பெயர்களும் உள்ளதால் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் பார்த்துவிட்டு தான் கூறமுடியும்.

**(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.